**CCE PF**
**CCE PR**
**REVISED & UN-REVISED**

**D**

ಕರ್ನಾಟಕ ಪ್ರೌಢ ಶಿಕ್ಷಣ ಪರೀಕ್ಷಾ ಮಂಡಳಿ, ಮಲ್ಲೇಶ್ವರಂ, ಬೆಂಗಳೂರು – 560 003

**KARNATAKA SECONDARY EDUCATION EXAMINATION BOARD, MALLESWARAM, BANGALORE – 560 003**

ಎಸ್.ಎಸ್.ಎಲ್.ಸಿ. ಪರೀಕ್ಷೆ, ಮಾರ್ಚ್/ಏಪ್ರಿಲ್ — 2020

**S. S. L. C. EXAMINATION, MARCH/APRIL, 2020**

ಮಾದರಿ ಉತ್ತರಗಳು

# MODEL ANSWERS

ಸಂಕೇತ ಸಂಖ್ಯೆ : **10-T**

**CODE NO. : 10-T**

ವಿಷಯ : ಪ್ರಥಮ ಭಾಷೆ — ತಮಿಳು

## Subject : First Language — TAMIL

**( ಖಾಸಗಿ ಅಭ್ಯರ್ಥಿ & ಪುನರಾವರ್ತಿತ ಖಾಸಗಿ ಅಭ್ಯರ್ಥಿ / Private Fresh & Private Repeater )**

ದಿನಾಂಕ : 27. 03. 2020 ] [ ಗರಿಷ್ಠ ಅಂಕಗಳು : **125**

Date : 27. 03. 2020 ] **[ Max. Marks : 125**

1. தொழுந்தொறும் தொழுந்தொறும் என வருவது - $10 \times 1 = 10$

(A) இரட்டைக் கிளவி (B) அடுக்குத் தொடர்

(C) இரட்டுற மொழிதல் (D) தொகைநிலைத் தொடர்

*Ans.* :

(B) அடுக்குத் தொடர் -

2. போர்தொடுத்த வேந்தனை எதிர்த்து வெற்றி கொள்ளுதல் -

(A) வஞ்சி (B) உழிஞை

(C) தும்பை (D) வாகை

*Ans.* :

(C) தும்பை

3. பைந்தமிழ் என்பது -

(A) பசும் + தமிழ் (B) பசுந் + தமிழ்

(C) பசுமை + தமிழ் (D) பைந் + தமிழ்

*Ans.* :

(C) பசுமை + தமிழ்

4. முரண் தொடை -

(A) இரவும் பகலும் (B) பேரும் புகழும்

(C) பாட்டும் பரிசும் (D) சீரும் சிறப்பும்

*Ans.* :

(A) இரவும் பகலும்

5. கலங்கு என்பது -

(A) உயிரளபெடை (B) ஒற்றளபெடை

(C) குற்றியலுகரம் (D) குற்றிய கரம்

*Ans.* :

(B) ஒற்றளபெடை

6. இந்தியா வென்றது -

(A) காலவாகு பெயர் (B) இடவாகு பெயர்

(C) பொருளாகு பெயர் (D) சினையாகு பெயர்

*Ans.* :

(B) இடவாகு பெயர்

7. ஆடுபாம்பு என்பது -

(A) வினைத் தொகை (B) பண்புத் தொகை

(C) வேற்றுமைத் தொகை (D) உம்மைத் தொகை

*Ans.* :

(A) வினைத் தொகை

8. ‘சுண்ணம்’ என்பதன் பொருள் -

(A) நிறம் (B) மணம்

(C) வண்ணம் (D) மகரந்தம்

*Ans.* :

(D) மகரந்தம்

9. அகவலோசை உடையது

(A) வெண்பா (B) ஆசிரியப்பா

(C) வஞ்சிப்பா (D) க ப்பா

*Ans.* :

(B) ஆசிரியப்பா

10. செய்யுளுக்கே உரியது -

(A) பெயர்ச் சொல் (B) வினைச் சொல்

(C) உரிச் சொல் (D) இடைச் சொல்

*Ans.* :

(C) உரிச்சொல்

**II. முன்னுள்ளதைப் போன்று பின்னுள்ளதை நிரப்புக** **5 × 1 = 5**

11. ‘கொடுத்து’ என்பது : வினையெச்சம்.

‘கொடுத்த’ என்பது : ......................................... .

*Ans.* :

பெயரெச்சம்

12. முல்லைக்குத் தேர் ஈந்தான் : பாரி.

ஔவைக்குக் கனி கொடுத்தான் : ......................................... .

*Ans.* :

அதியமான் நெடுமானஞ்சி

13. நூலைப் போல் : சேலை.

தாயைப் போல் : ........................................ .

*Ans.* :

பிள்ளை

14. கன்று வருடி மடி சுரக்கும் : பசு.

பாலை வார்த்தாலும் விடம் குறைக்காது : ........................................ .

*Ans.* :

பாம்பு

15. மூன்று சீர்களைக் கொண்டது : சிந்தடி.

இரண்டு சீர்களைக் கொண்டது : ........................................ .

*Ans.* :

குறளடி

**III. ஒரு தொடரில் விடை தருதல் : 8 × 1 = 8**

16. இறைவன் பேரின்பப் பெருங்கடலாவது எப்போது ?

*Ans.* :

பாசக் கட்டினை ஒழிக்கும் போது

17. நிலமகள் யாரைக் கண்டு சிரிப்பாள் ?

*Ans.* :

'எம்மிடத்தில் எதுவுமில்லை' என்று சோம்பி இருப்பாரைக் கண்டு

18. தலைவி என்ன சமைத்தாள் ?

*Ans.* :

புளிக்குழம்பு

19. மதுரைச் சொக்கநாதன் மண்ணைச் சுமந்தது ஏன் ?

*Ans.* :

வந்தி என்ற முதிய பெண்மணியின் பிட்டுக்காக

20. உணர்வே பெருகியிருப்போர் எதைப் பற்றிக் கவலைப்பட மாட்டார்கள் ?

*Ans.* :

எதிர்காலத்தைக் குறித்து

21. சைகாஸ் மரங்கள் எவ்வாறு காட்சியளிக்கின்றன?

*Ans.* :

பாறைகளில் வளைந்து ஊஞ்சல் தொங்குவது போல்

22. 'புதிர்' என்பது யாது ?

*Ans.* :

புரிய முடியாத தன்மையினை உணர்த்துவதற்குப் பயன்பட்ட சொல்

23. அணி என்றால் என்ன ?

*Ans.* :

செய்யுளைச் சொல்லாலும் பொருளாலும் அழகுபடுத்துவது

**IV. மூன்று அல்லது நான்கு தொடர்களில் விடை தருக. 15 × 2 = 30**

24. மனிதர்கள் அறவழியில் செயல்பட தேவையான பண்புகள் யாவை ?

*Ans.* :

வறியவர்க்குப் பொருளை அளித்தல்

பொருள்களின் நிலையாமையை அறிதல்

எவ்வுயிரையும் துன்புறுத்தாது வாழ்தல்

25. இலங்கை வேந்தன் சீதையைத் தொட அஞ்சியது ஏன் ?

*Ans.* :

உன்னை விரும்பாத பெண்ணை நீ வ ந்து தொட முயன்றால்,

உன் பத்துத் தலைகளும் சுக்கு நூறாய் வெடித்துச் சிதறிவிடும்.

26. ஒற்றுமையில்லா மனித குலத்திற்கு அருவியை எவ்வாறு உவமிக்கிறார் ?

*Ans.* :

மலை உச்சியில் ஊறும் அருவிகள் ஒரே வழியில் கலக்கின்றன. மனித குலம் மட்டும் "உயர்வும் தாழ்வும்" வளர்த்து ஒற்றமை இல்லாமல் அடித்துக் கொள்கிறது.

27. திரு வி.க.-வின் நினைவாற்றலுக்கான சான்றுகள் தருக.

*Ans.* :

நீண்டகாலம் கழித்து அவரைச்சந்திக்க வரும் எந்த நண்பராக இருந்தாலும் அவரின் முழு விவரத்தை நொடியில் கூற வல்லவர். முறைப்படி சொற்பொழிவு குறிப்புகள் ஒன்று விடாமல் தொகுத்து வழங்கும் ஆற்றல் உள்ளவர்.

28. இறந்தகால உழைப்பு, முயற்சி நிகழ்காலத்தை செதுக்கிக் கொடுக்கும் என்பதனை வைரமுத்து எவ்வாறு விளக்குகிறார் ?

*Ans.* :

இறந்த காலத்தில் கட்டப்பட்டதுதான் தாஜ்மஹால், அந்த இருந்த காலம் தாஜ்மஹால் மேல் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

திருவள்ளுவரின் இறந்த கால உழைப்பும் முயற்சியும் தான் திருக்குறளாக நம்மில் வாழ்ந்து வருகின்றது.

29. பம்பன் இயற்றிய நூல்கள் யாவை ?

*Ans.* :

ஆதிபுராணம்

விக்கிராமார்ச்சுன விஜயம் (அல்லது) பம்ப பாரதம்

30. ஆரிய மன்னர்கள் தமிழ்நாட்டு அரசர்களை எவ்வாறு பழித்தனர் ?

*Ans.* :

தங்கள் முன்னோர் சோர்ந்த காலத்து தமிழ்நாட்டரசர்கள் சூழ்ச்சியாக வந்து இமயத்தில் பு யையும் கயலையும் பொறித்துச் சென்றனர். “இப்போது ஆண்மையிருந்தால், வரட்டும், ஆற்றல் இருந்தால் பொரட்டும்”

31. இரட்டைக்கிளவியைச் சான்றுடன் விளக்குக.

*Ans.* :

இருசொல் அடுக்கி ஒ க்குறிப்புடன் வரும்.

பிரித்தால் பொருள் தராமல் வருவது (எ.கா.) பளபள

32. யாப்பின் உறுப்புகள் யாவை ?

*Ans.* :

- எழுத்து
- அசை
- சீர்
- தளை
- அடி
- தொடை

33. வெண்பாவின் இலக்கணம் யாது ?

*Ans.* :

- செப்பல் ஓசை உடையது
- ஈற்றடி முச்சீராகவும், ஏனைய அடிகள் நான்கு சீர்களாக வரும்
- வெண்சீர் வெண்டளையும் இயற்சீர் வெண்டளையும் மட்டும் கொண்டுவரும்.

34. பொன்முடியார் அரசன், அன்னை மற்றும் தந்தையாரின் கடமைகளாக் கூறுவன யாவை ?

*Ans.* :

நல்லொழுக்கத்தைக் கற்பிப்பது நாடாளும் "வேந்தனின்" கடமை

மகனைப் பெற்று வளர்த்து விடுதல் "அன்னையின்" கடமை,

"நற்பண்புகள் நிறைந்தவனாக மகனை உருவாக்குதல்" தந்தையின் கடமை

35. மேலை நாடுகளில் உரையாடல் கலை எவ்வாறு மதிக்கப்படுகிறது ?

*Ans.* :

'உரையாடல்' உயர்ந்ததோர் இலக்கியக் கலையாகவே மேலைநாடுகளில் மதிக்கப்படுகிறது. பண்பாட்டையும் நாகரிகத்தையும் விளக்கும் நற்கலையாகவும் போற்றப்படுகிறது.

36. பறவைகள், விலங்குகள் மற்றும் மரங்கள் இன்றளவும் கோயில்களில் வணங்கப்படுவதன் நோக்கம் யாது ?

*Ans.* :

இந்த உலகத்தில் மரம், செடி, கொடிகள் மிருகங்கள் பறவைகள் எல்லாம் சௌக்கியமா இருந்தாத்தான் நாமளும் சௌக்கியமாக இருக்க முடியும்.

எல்லாவற்றின் மதிப்பையும் புரிஞ்சுகிறதுக்குத் தான்.

37. கிராமத்து மக்கள் கிராமத்தை விட்டுவிட்டு நகரத்திற்குச் செல்வதற்கான காரணம் யாது ?

*Ans.* :

கிராமத்தில் கூ த்தொகை கட்டாது.

நகரத்தில் கிடைக்கும்.

நகரத்தில் வேலை கிடைக்கும்.

38. வேற்றுமையணி என்பது யாது ?

*Ans.* :

இரு பொருளை ஒப்பிட வந்த ஆசிரியர் ஏதேனும் ஒரு காரணத்தால் இரண்டையும் வேறுபடுத்துவது.

எ.கா தீயினால்...

**V. ஐந்து அல்லது ஆறு தொடரில் விடை எழுதுதல் : 6 × 3 = 18**

39. காலமறிதல் குறித்து வள்ளுவர் கூறுவனவற்றை விளக்குக.

*Ans.* :

கூகையைக் காகம் பக ல் வெல்லும் காக்கையைக் கூகை இரவில் வெல்லும் பகைவரை வெல்லக்கருதும் அரசன் காலம் அறிதல் வேண்டும்.

மீன் வரும் வரை காத்திருக்கும் கொக்கு போல் காலம் வரும் வரை காத்திருத்தல் வேண்டும். மீன் வந்த போது கொக்கு குத்துவது போல் காலம் வரும் போது விரைந்து செயல்பட வேண்டும்.

40. இளையான் குடிமாறனாரும் அவருடைய மனைவியாரும் அமுதை எவ்வாறு சமைத்தனர் ?

*Ans.* :

இளையான் குடிமாறர் கொண்டு வந்த நெல் ல் சேற்றை நீக்கினார்; அடுப்பெரிக்க கூரை வரிச்சுகளை வெட்டினார்; நெல்லைப் பதமாக்கி வறுத்துக் குற்றி அரிசியாக்கி உலையி ட்டு அமுதாக்கினார்; பருவமுறாத இலைக்கறிப் பயிர்களை பலவகையான கறிகளாக்கி சமைத்தார்.

41. நிலக்கரி தரும் நன்மைகளை எழுதுக.

*Ans.* :

தொழிற்சாலைகளை இயக்குதல்

அனல்மின் தயாரிக்க உதவுதல்

சாலைகளை அமைக்கத் துணையாக இருத்தல்

42. கடுகு உள்ளத்தாரைப் பற்றி பாரதிதாசன் எவ்வாறு சாடுகிறார் ?

*Ans.* :

தான் உண்டு, தன் வேலை உண்டு என்று இருப்போர். மற்றவர்களைப் பற்றி சிறிதும் சிந்திக்காமல் எப்போதும் தன்னல உணர்வுடனேயே வாழ்ந்து வருவோர் கடுகு போல் உள்ளம் கொண்டோர்.

43. இளைஞன் பாறையில் மோதிய பந்தாய்த் திரும்பி வருவதால் உண்டாகும் விளைவுகள் யாவை ?

*Ans.* :

பதினேழு வயதி ருந்து இருபத்திநான்கு வயதிற்குள் தனது இலட்சியத்தைத் தீர்மானித்துக் கொள்ள வேண்டும்.

இல்லையெனில் பாறையில் மோதிய பந்தாய் திரும்பி வர நேரிடும்.

அப்போது படும் அடியினால் முப்பது வயதிலேயே முதுமை வந்துவிடும்.

44. சீதைக்கு எந்த தீங்கும் ஏற்படவில்லை என்பதை அனுமன் எவ்வாறு விளக்கினான் ?

*Ans.* :

பிரம்மன் படைத்த அண்டகோளம் வெடிக்கவில்லை. ஆதி சேடனின் தலை கிழிந்து போகவில்லை. கடல்கள் கரையை கடந்து பொங்கவில்லை. சூரியன் முதலான கிரகங்கள் கீழே விழவில்லை. வேத விதிகள் அழியவில்லை.

**VI. குறிப்பு வரைதல் : $2 \times 3 = 6$**

45. திரிகடுகம்

*Ans.* :

திரிகடுகம் :

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று சுக்கு, மிளகு, திப்பி யால் ஆன மருந்தின் பெயர் இந்நூலுக்கானது. ஒவ்வொரு பாடலும் மூன்று கருத்துகளை உடையது. மக்களின் மனமயக்கத்தைப் போக்கும்.

46. பாரதியார்

*Ans.* :

சுப்பிரமணியம் என்ற இயற்பெயரை உடையவர். 'பாரதி' என்ற பட்டம் பெற்றார். எட்டயப்புரத்தைச் சேர்ந்தார் தேசியகவி, மகாகவி, முண்டாசுகவி என்றெல்லாம் அழைக்கப்பட்டார். எளியவர்கள் படிக்கும் வண்ணம் எளியநடைப் பாட்டு எழுதினார்.

**VII. கீழ்வரும் அணியைச் சான்றுடன் விளக்குதல் : 1 × 3 = 3**

47. தற்குறிப்பேற்ற அணி

*Ans.* :

தற்குறிப்பேற்ற அணி
இயல்பாக நடக்கும் ஒன்றின் மீது ஆசிரியர் தன் கருத்தை ஏற்றிச் சொல்வது.
சான்று : மதுரைக் கோட்டைச்சுவரின் கொடி கோவலனையும் கண்ணகியையும் கண்டு வாராதீர் என்பது போல் அசைந்தது என இளங்கோவடிகள் கூறியுள்ளார்.

**VIII. இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக : 4 × 3 = 12**

48. "பட்டினி கிட பலாவையே உண்பதென்று"

*Ans.* :

இடம் : இன்றைய களாவும் நாளைய பலாவும். ஆசிரியர் ஈரோடு தமிழன்பன்.

பொருள் : இன்றைய களா சிறந்தது என்று யார் சொன்னது. உன் பலாக்களைப் பறிப்பவன் ஓதியது. களா என்றால் களாதான் கதி பலா கனா தான். பட்டினி கிட விரதம் கொள் சந்திப்பது சாவா. பலாவையே உண்பது என்று முடிவு செய்.

49. "நம்மைப் பிடித்த பிசாசுகள் போயின நன்மை கண்டோமென்று கும்மியடி"'

*Ans.* :

இடம் : பாரதியின் பெண் விடுதலைக்கும்மி

பொருள் : பெண்களே கும்மியடிப்போம் தமிழ்நாடு குலுங்கட்டும். நாம் ஒன்று இணைவோம் நம்மைப் பிடித்திருந்த அறியாமை, மூடத்தனம் என்ற பிசாசுகள் நீங்கின. இனி எப்போதும் நமக்கு நன்மையே.

50. "தளத்தைத் தொட்டதும் தானே கதவுகள் திறக்கின்றன."

*Ans.* :

இடம் : மனம் அவாவும் இலங்காவி. ஆசிரியர் முனைவர் அ. சங்கரி.

விளக்கம் : இலங்காவியில் மலைச் சிகரங்களுக்கிடையே இரும்புவடக்கார்கள் சென்று வருகின்றன. அதில் பயணிக்க 30 ரிங்கெட்டுகள் கட்டணம். கார்கள் தளத்தைத் தொட்டதும் தானே திறக்கின்றன. ஆறு பேர் அமர இருக்கைகள் உள்ளன.

51. "திரவியம் திரைக்கரத்து எடுத்துச் சிந்தியே."

*Ans.* :

இடம் : சீறாப்புராணம். ஆசிரியர் உமறுப்புலவர்.

விளக்கம் : பெருக்கெடுத்த ஆறு களிப்பால் கரைபுரண்டு குறிஞ்சி நில ிரவியங்களை அள்ளிக்கொண்டு தூதர் முகமதுவின் பாதங்களில் தூவியது போல் தூவி தொழுது சிந்தியது.

**IX. கீழ்வரும் பழமொழியை விளக்குக : 1 × 3 = 3**

52. "ஞாயிற்றைக் கைமறைப்பார் இல்"

*Ans.* :

"ஞாயிற்றைக் கைமறைப்பார் இல்"

வானத்து ஞாயிற்றை கையால் மறைப்பவர் இல்லை. அதுபோல பரந்த அறிவாற்றல் உடையவரை இழிவான சொற்களைச் சொல் அவர் புகழை மறைத்து ஒளிப்பார் இல்லை.

அல்லது

"சிறு துளி பெருவெள்ளம்"

*Ans.* :

சிறிய துளிகள் சேர்ந்தால் பெரிய வெள்ளம் ஆகும். சிறுக சிறுக சேமித்தால் நமக்கு பெருந்தொகை கிடைக்கும். பெரிய வெள்ளத்தால் நன்மை உண்டு. அது போல் பெருந்தொகையால் நன்மை உண்டு.

**X. அடிபிறழாமல் எழுதுதல் : 1 × 4 = 4**

53. "இந்திய நாடிது" - என வரும் பபாடல்.

*Ans.* :

"இந்திய நாடிது என்னுடைய நாடே"

என்று தினந்தினம் நீயதைப் பாடு; சொந்தமில்லாதவர் வந்தவர் ஆள தூங்கிக் கடந்தது போனது
மாள; வந்தவர் போனவர் யாரையும் நம்பி வாடின காலங்கள் ஓடின தம்பி!
இந்தத் தினம் முதல் "இந்திய நாடு என்னுடை நாடே" யென்ற எண்ணத்தைக் கூடு.
இயற்றியவர் - நாமக்கல் கவிஞர்

அல்லது

"பட்டங்கள் ஆள்வதும்" - என வரும் பாடல்.

*Ans.* :

"பெண் விடுதலைக் கும்மி"

பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண் இளைப்பில்லை காணென்று கும்மியடி!

- மகாகவி சுப்பிரமணிய பாரதியார்

**XI. எட்டு அல்லது பத்து தொடரில் விடை தருதல் :** **2 × 4 = 8**

54. பேராசிரியர் சேதுப்பிள்ளையின் கலைநயமிக்க உரையாடலை விளக்கும் நிகழ்ச்சி ஒன்றினை விவரி.

*Ans.* :

பேராசிரியர் சேதுப்பிள்ளையின் உரையாடல்கள் இன்பம் பயப்பன.

நேரம் போவதே தெரியாது; அவருடன் பேசிக் கொண்டிருப்பவர் தேனுண்ட வண்டென மயங்கியிருப்பர்.

ஒருமுறை விருந்தின் போது சுவையான தயிர் வடையை உண்ட, இந்தித்துறைத் தலைவர் இது எந்த விடுதியில் தயாரிக்கப்பட்டது என்று வினவ அவர் மாணவியர் பக்கம் திரும்பி "இவர்கள் கைவண்ணம் இங்கு கண்டோம்" என கம்பன் வரிகளை நினைவுபடுத்தினார்.

55. பிறர்க்கென வாழ்வோரின் அரும்பெரும் பண்புகளை இளம்பெருவழுதி எவ்வாறு பட்டிய டுகின்றார் ?

*Ans.* :

பிறர்க்கென வாழும் பண்புடையார் இந்திரனின் அமுதமே கிடைத்தாலும் தனித்து உண்ணமாட்டார்கள்.

வெறுப்பு கொள்ள மாட்டார்கள்; சோர்வதும் இல்லை; அஞ்சுவதற்கு அஞ்சி வாழ்வர்; புகழென்றால் உயிரையும் கொடுப்பர்; பழி என்றால் உலகே கிடைப்பதாக இருப்பினும் ஏற்கமாட்டார்கள். கவலையற்றார்; இத்தகையராலே இவ்வுலகம் இன்னும் இருந்து வருகிறது.

(அல்லது)

சேரன் கண்ணகிக்குக் கட்டிய கோயிலைக் கண்டு வியந்து கூறியவற்றை தொகுத்து எழுதுக.

*Ans.* :

கல்லால் ஆனதா? மரத்தால் ஆனதா? மண் கொண்டியற்றியதா! அன்றிப் பொன் கொண்டியற்றியதா! மரத்தின் நெளிவையும் வளைவையும் எப்படிக் கல் ல் ஏற்றினீர்?

ஓ! கல் ல் வடித்தது என்று யாரும் கூறார். நிற்பது கண்ணகியே! மருளும் வண்ணம் இயற்றிய உங்களுக்கு ஆயிரம் காணி மானியம் விட்டேன்.

**XII. கீழ்வரும் செய்யுளின் பொருளை விளக்கி எழுதுக : 1 × 4 = 4**

56. "மாரிக் காலத்து இரவினில் வைகியோர் தாரிப்பு இன்றிப் பசித்தலைக் கொள்வது பாரித்து இல்லம் அடைந்தபின், பண்பு உற வேரித் தாரான் விருந்து எதிர்கொண்டனன்.

*Ans.* :

அன்று மழைப் பெய்யும் நள்ளிரவில் உறக்கமில்லாமல் மாறனாரும் அவர் மனைவியாரும் விழித்திருந்தனர். ஆதரவு ஒன்றும் இல்லாமையால் அவர்கள் பசி மிகுத்து இருந்தனர். பின்னர் வீட்டின் கதவை தாழிட்டு அடைத்து இருக்கையில். அவ்வேளையில் தேன் துளிர்க்கும் மாலையணிந்த சிவனடியார் உருவில் வந்த சிவபெருமான் வருகை தர அவரைப் பண்பினால் அன்புடன் இருவரும் எதிர்கொண்டு வரவேற்றனர்.

(அல்லது)

"பசியால் மடிந்தோர் படிக்கல் சுமந்தோர்
வதைத்துச் சிதைந்தோரும் என் மக்களே.
கைகால் பிடிப்போர் கைகட்டிக் கொள்வோர்
அடிமையிலும் அடிமையப்பா என் மக்களே."

*Ans.* :

என் மக்கள்

பசியால் வருந்தி படிக்கற்களைச் சுமந்து வருந்தி உழைப்போர். இச்சமூகத்தில் ஒடுக்கப்பட்ட பாட்டாளி மக்களே வதைத்துச் சிதைந்தோரும் அவரே. முதலாளிகளின் கால் கை பிடித்து கைகட்டி நிற்கும் அடிமையிலும் அடிமைகளாய் இருப்பவர் பாட்டாளி மக்களே.

**XIII. பின்வரும் பகுதியைப் படித்து கொடுத்துள்ள வினாக்களுக்கு விடை தருதல் : 2 × 2 = 4**

மண் அரிப்பால் வளமான மேல்மண் முழுவதும் கரைந்தோடி வீணாவதோடு ஆறுகளையும் மேடாக்கி வெள்ளக் காலங்களில் பக்கத்து நிலங்களும் ஊர்களும் வெள்ளத்தில் மூழ்கச் செய்கின்றது. காடுகள் நீரை ஏற்றுச் சிறிது சிறிதாக விடுவதாலும் காட்டு மரங்களின் வேர்கள் மண்ணை இறுகப் பற்றி நின்று அரிப்பு ஏற்படாமல் தடுப்பதாலும் இத்தீமை தவிர்க்கப்படுகின்றது. காடுகள் இருப்பதனால் தான் மழைநீர் மொத்தமாக வழிந்து ஓடுவதில்லை. இதனால் வெள்ளப்பெருக்கு, மண்ணரிப்பு மற்றும் நிலச்சரிவு தவிர்க்கப்படுகின்றன.

மழை இல்லாத பொழுது நாம் ஏரி குளங்களைப் பயன்படுத்துவதோடு, கிணறுகள் வாயிலாய் நிலத்தடி நீரையும் பயன்படுத்துகின்றோம். மற்றும் மழை இல்லாக் காலங்களில் காடுகளுக்கும்

பசுமைச் செடிகொடிகளுக்கும் உள்ளூற்றாய் இருப்பதும் நிலத்தடி நீர்தான். நிலப்பரப்பு முழுவதும், மரங்களின் வேர்களும், புல்லும், சிறுவகைச் செடிகளும் நிறைந்து மழைநீர் உடனே வழிந்தோடிவிடாமல் தடுப்பதாலேயே இந்த நீர் சிறிது சிறிதாக மண்ணுக்குள் இறங்கி உள்ளே சேர்த்து வைக்கப்படுகின்றது. இந்த வகையில் காடுகளும் மரம்செடி கொடிகளும் புல் வகைகளும் நமக்கு அரிய பேருதவி புரிகின்றன.

57. a) காடுகளால் மண்ணரிப்பு எவ்வாறு தவிர்க்கப்படுகின்றது ?

b) மழைநீர் எவ்வாறு சேமித்து வைக்கப்படுகிறது ?

*Ans.* :

a) காடுகள் இருப்பதனால்தான் மழைநீர் மொத்தமாக வழிந்து ஓடுவதில்லை. இதனால் வெள்ளப் பெருக்கு, மண்ணரிப்பு மற்றும் நிலச்சரிவு தவிர்க்கப்படுகின்றன.

b) மரங்களின் வேர்களும், புல்லும் சிறுவகைச் செடிகளும் நிறைந்து மழைநீர் உடனே வழிந்தோடி விடாமல் தடுப்பதாலேயே இந்த நீர் சிறிது சிறிதாக மண்ணுக்குள் இறங்கி உள்ளே சேர்த்து வைக்கப்படுகிறது. இவ்வகையில் மரம் செடி கொடிகளும் புல் வகைகளும் நமக்கு பேருதவியாக விளங்குகின்றன.

**XIV. மடல் எழுதுதல் :** **1 × 5 = 5**

58. உன் எதிர்கால கல்வித்திட்டம் குறித்து நண்பனுக்கு / தோழிக்கு மடல் எழுதுக.

அல்லது

நீ வசிக்கும் பகுதியில் பெருமழைப் பொழிவினால் சிதைந்து கிடக்கும். சாலைகளைச் சீரமைத்து தருமாறு மாநகர ஆணையருக்கு மடல் எழுதுக.

*Ans.* :

நாள் :

இடம் :

அன்புள்ள..

மதிப்பிற்குரிய ..

கடிதப்பொருள்

இவண்

எழுதுவோர் பெயர்

பெறுவோர் முகவரி :

**XV. கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளுக்கு ஏற்றவாறு, இருபது வரிகளுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுதல் :** **1 × 5 = 5**

59. “நெகிழிப் (பிளாஸ்டிக்) பயன்பாட்டைத் தவிர்ப்போம்.”

அல்லது

“கணினி விளையாட்டுகளும்

கற்ற  ல் கவனக் குறைவும்.”.

*Ans.* :

- தலைப்பிற்கேற்ற முன்னுரை
- தலைப்பை ஒட்டிய பக்கத் தலைப்புகள்
- கட்டுரையின் நோக்கம் நிறைவுறும் வகையில் வ  யுறுத்தல்
- முடிவுரை